## (ஐ) விலைகளும் கூலிகளும்

### 1. விலைகள்

கொழும்பிலுள்ள நுகர்வோரின் விலைக்குறிகாட்டி மாத்திரமே பொருளாதார விலைமட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களை அளவிடுவதற்கு ஒரு குறிகாட்டியாக விளங்குகின்றது. 1973ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் இதன் குறைபாடுகள் விளக்கப்பட்டுள்ளது. மேலும் குறைபாடுகள் காரணமாக கொழும்பிற்கான நுகர்வோரின் விலைக்குறிகாட்டி, பொருளாதாரத்தில் ஏற்பட்ட உண்மையான விலை அதிகரிப்புகளைக் குறைத்து மதிப்பிடுவதுபோல் தோன்றுகிறது. ஆயினும், இத்தகைய குறைப்பு மதிப்பீடுகள் கூட அதிகரித்துச்செல்லும் பண வீக்கத்தின் அளவினை நோக்கிக் கவனம் ஈர்க்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகிறது.

அட்டவணை II (ஐ) 1

கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி (1952 = 100)

| ஆண்டு | எல்லா விடயங்களும் | பண்ட வகைப்படி | | | | | துறை வகைப்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரிபொருளும் வெளிச்சமும் | வாடகை | பல்வகைப் பட்ட பொருட்கள் | உள்நாட்டுத் தொகுதி | இறக்குமதித் தொகுதி | ஏற்றுமதித் தொகுதி |
| முக்கியத்துவம் ... | 100.0 | 61.9 | 9.4 | 4.3 | 5.7 | 18.7 | 60.0 | 35.0 | 5.0 |
| 1970 சராசரி .. | 138.2 | 136.6 | 137.3 | 136.1 | 109.8 | 153.2 | 142.9 | 129.3 | 157.3 |
| 1971 சராசரி .. | 141.9 | 139.1 | 145.0 | 140.8 | 109.8 | 159.5 | 148.9 | 129.7 | 157.9 |
| 1972 சராசரி ... | 150.8 | 147.5 | 163.4 | 145.9 | 109.8 | 169.4 | 161.6 | 136.1 | 140.6 |
| 1973 சராசரி | 165.4 | 164.8 | 186.1 | 164.4 | 109.8 | 170.0 | 167.8 | 162.5 | 171.9 |
| 1ம் கால் .. | 157.7 | 155.5 | 181.6 | 155.4 | 109.8 | 168.7 | 164.6 | 148.3 | 159.0 |
| 2ம் கால் ... | 161.4 | 160.7 | 181.6 | 155.4 | 109.8 | 170.4 | 165.8 | 154.6 | 170.4 |
| 3ம் கால் .. | 167.8 | 169.3 | 188.7 | 167.5 | 109.8 | 170.4 | 169.8 | 166.1 | 171.6 |
| 4ம் கால் | 174.8 | 179.3 | 192.3 | 179.2 | 109.8 | 169.8 | 171.2 | 181.2 | 186.6 |
| 1974 சராசரி | 185.8 | 189.7 | 204.6 | 221.0 | 109.8 | 178.3 | 176.1 | 195.7 | 251.4 |
| 1ம் கால் .. | 178.3 | 181.1 | 192.3 | 216.4 | 109.8 | 174.2 | 171.2 | 184.8 | 236.5 |
| 2ம் கால் ... | 182.7 | 184 2 | 208.7 | 221.0 | 109.8 | 178.4 | 176.0 | 187.7 | 249.6 |
| 3ம் கால் ... | 188.6 | 193.2 | 208.7 | 221.0 | 109.8 | 180.0 | 177.0 | 201.4 | 259.8 |
| 4ம் கால் | 193.4 | 200.4 | 208.7 | 225.4 | 109.8 | 180.5 | 180.4 | 208.8 | 259.8 |
| 1972 விட 1973 இல் சதவீத அதிகரிப்பு | 9.7 | 11.7 | 14.0 | 12.7 | 0.0 | 0.3 | 3.8 | 19.4 | 22.3 |
| 1973 விட 1974 இல் சதவீத அதிகரிப்பு | 12.3 | 15.1 | 9.9 | 34.4 | 0.0 | 4.9 | 4.9 | 20.4 | 46.2 |

மூலம்: குடித்தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

1974 ஆம் ஆண்டில் கொழும்பிற்கான நுகர்வோரின் விலைக் குறிகாட்டி 12.3 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட 1973ன் எண் தொகை 9.7 சத வீதத்தாலேயே அதிகரித்துக் காணப்பட்டது. (அட்டவணை II (ஐ) 1 இனைப் பார்க்கவும்) 1960-1970 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான, விலைக் குறிகாட்டியின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பானது கிட்டத்தட்ட 3.3 சதவீதமாகக் காணப்பட்டது. இத்துடன் நோக்குகையில், 1970 ஆம் ஆண்டு தொடக்கம், குறிகாட்டியில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பானது அண்மைக் காலங்களில் தான் பண வீக்கத் தாக்கங்கள், பெருமளவு சக்தியினைப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

கொழும்பிற்கான நுகர்வோரின் விலைக் குறிகாட்டியினைப் பொருட்களின் அடிப்படையில் பகுத்து நோக்குமிடத்து, எப்பொருட் தொகுதிகளில், கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென அறிவதற்கு இலகுவாகிறது. பொருட்களுக்கான குறிகாட்டிகளில் முன்னேங்கி நிற்கும் அம்சமென்னவெனில், உணவுத் தொகுதிக் குறிகாட்டி நிலையாக உயர் மட்டத்தினைக் கொண்டுள்ளமையாகும். குறிகாட்டியில் இடம்பெற்ற உணவுத் தொகு 'யின் விலைகள் 1974 ஆம் ஆண்டின் 15.1 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட, 1973 ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 11.7 சதவீதமாக இருந்தது. மேலும், மொத்தக் குறிகாட்டியில் உணவுத் தொகுதி கிட்டத்தட்ட 62 சத வீதத்திற்கு வகைகூறுகிறமையால் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் உணவுக்கான குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றம் கணிசமானதாகும். அட்டவணை II (ஐ 1 இன் படி, உடை, எரிபொருள், வெளிச்சம் என்பவற்றிற்கான, விலை அதிகரிப்புக்கள் சில வேளைகளில் கூடிய நிலையில் இல்லாவிடினும், பொதுவாக, உயர்வாகவே காணப்பட்டன. இவ்வாறாக, உடைக்கான குறிகாட்டி 1974 ஆம் ஆண்டில் விலைகளில் 9.8 சத வீத அதிகரிப்பைக் காட்ட, 1973ம் ஆண்டில் 14.0 சத வீதமாக இருந்தது, மேலும் எரிபொருள், வெளிச்சம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் நிலைமை மிக மோசமாக இருந்தது. 1973 ஆம் ஆண்டில் எரிபொருள் விலை 12.7 சத வீதத்தால் அதிகரித்த வேளையில் 1974 ஆம் ஆண்டில் குறிகாட்டியின் அதிகரிப்பு மிகப் பெருமளவாக இருந்ததுடன், சத வீத அதிகரிப்பு 34.4 ஆகும்.

1974 ஆம் ஆண்டில் சில முக்கிய உணவுப் பொருட்களின் விலைகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. 1974 ஆம் ஆண்டு யூலை மாதத்தில், உற்பத்தியாளர்களுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட நெல் விலை அதிகரித்த அதே சமயத்தில், பங்கீட்டரிசியின் விலை, இருத்தலொன்றுக்கு ரூ. 1.15 இலிருந்து ரூ. 1.25 ஆக அதிகரித்தது. 1974 ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் புதிய பிரதேசவாரியான திட்டம் புகுத்தப்பட்டதுடன் பங்கீட்டரிசியின் விலை ரூ. 1.10 ஆகக் குறைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் ஒரு இருத்தலுக்கான கோதுமை மாவின் விலை ரூ. 0.70 இலிருந்து ரூ. 1.10 ஆகக்கூட்டப்பட்டு கிட்டத்தட்ட 57 சத வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1974 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் ஒரு ஆளுக்கான ஆகக்குறைந்த பங்கீட்டரிசி ஒரு இருத்தலாக இருந்ததிலிருந்து (1973 இல் கொணரப்பட்டது) ½ இருத்தலாகக் குறைக்கப்பட்டது. கோதுமை மாச் சந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள், பாணின்கிடைப்பனவினைத் தாக்கியதோடு பாணின் விலையை கிட்டத்தட்ட 35 சத வீதத்தால் அதிகரித்து, இருத்தலொன்றுக்கு 98 சதமாக்கியது. மேலும், சீனிச் சந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஏனைய இடங்களிலும் பார்க்க, இங்கு முனைப்புடையாக இருந்தது. 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில்

உலகச் சந்தையில் ஏற்பட்ட அதிகரிப்பினல் சீனி விலை, முன்னைய விலையிலும் 150 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டு இருத்தலொன்றுக்கு ரூ 5/- ஆகியது. இது 1974 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதத்தில் 1974 ஆம் ஆண்டு மாச்சு மாத விலையிலும் 50 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டது.

கொழும்பிற்கான நுகர்வோரின் விலைக் குறிகாட்டியின் தொகுதி அடிப் படையிலான பாகுபாடு, விலை மட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் பிறி தொரு தோற்றத்தினைக் காட்டுகின்றது. இப்பாகுபாட்டில் பொருட்கள், உள் நாட்டுத் தொகுதி, இறக்குமதித் தொகுதி, ஏற்றுமதித் தொகுதி, எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளதுடன், இந்நாட்டின் பொதுவான விலை மட்டங்களில், இம்மூன்று தொகுதிகளும் ஏற்படுத்தும் தாக்கமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறக்குமதித் தொகுதியானது உணவு, உடை, எரிபொருள் என்பவற்றின் முக்கியமான பெரும்பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்வாறு, அமைந்திருக்கை யில் மொத்தக் குறிகாட்டியில் இறக்குமதித் தொகுதிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், மிகக் கணிசமானதாகும். பின்கூறப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் வாயிலாக பன்னாட்டுப் பண வீக்க அமுக்கங்கள் உள்நாட்டு விலை மட்டங்களைக் கணிசமானளவு தாக்க லாம் எடுத்துக்காட்டாக இறக்குமதித் தொகுதிகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1973இல் 19.4 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 20.4 சத வீதமாகியது. (அட்டவணை II (ஐ) 1 ஐப் பார்க்கவும்) மேலும், ஏற்றுமதித் தொகுதியில் வருகின்ற பொருட்களினைப் பொறுத்தவரையில், மிகவும் முக்கிய விலை அதிகரிப்பு வீதங்கள் பதிவுசெய்யப்பட்டபோதிலும், மொத்தக் குறிகாட்டி யில் இத்தொகுதிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைவானதாகும்.

அட்டவணை II (ஐ) 2 இல் கொழும்பிலான நுகர்வோருடைய விலைக் குறி காட்டியில் சேர்க்கப்பட்ட பொருட்களும், அப்பொருட்களுக்கான ஆண்டுமுழு வதற்குமான விலை மாற்றங்களும், பதியப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. உண வுத் தொகுதியில்தான் இவ்வாண்டில் அநேக விலை மாற்றங்கள் ஏற்பட்டுள் ளது. வெவ்வேறு மாதங்களில், உணவுக் குறிகாட்டி அதிகரிப்பதற்குக் கார ணமான சில பொருட்களாக வாசனைப் பொருட்கள், மிளகு, கடுகு, புளி, வெந்தயம், மீன், கருவாடு, தேங்காய்கள், தேங்காயெண்ணெய், மரக்கறிவகை கள், முட்டை, தேசிக்காய், கிழங்குவகைகள், இறைச்சி, கொத்தமல்லி, பால், கட்டிப்பால் விளங்குகின்றன. மறுபுறத்தில் சில சமயங்களில் இப்பொருட்க ளின் விலைகள் தளம்பலுறுவதனையும் கவனிக்கலாம் எவ்வாறுயினும், இவ் வாண்டிற்கான உணவுக் குறிகாட்டி மிகவும் திடமாக மேல்நோக்கிச் சென்றமை, சில பொருட்களில் விலைகள் குறைவடைந்தாலும் அவைகள், ஏனைய பொருட் களில் ஏற்பட்ட அதிகரிப்புகளை எதிரீடு செய்யப் போதாதிருந்தது. மேலும், பெற்ரோலியப் பொருட்களில் ஏற்பட்ட விலை உயர்வுத் தாக்கம், விலைகளில் கணிசமானளவு தாக்கம் ஏற்படுத்தின எண்ணெய் விலை அதிகரிப்பின் விளை வாக, 1974 ஆம் ஆண்டு சனவரி, பெப்புருவரி மாதங்களில் எரிபொருள், வெளிச்சக் குறிகாட்டி பெரிதாகையால், உயர்வடைந்ததுடன் அதனைத் தொடர்ந்து, அதிகரித்த நிலையில் நிலைத்துநின்றது. முதலில், எரிபொருட் செல வின் அதிகரிப்பிற்கு ஏற்ப, பெப்புருவரியில் புகைவண்டியினதும், பேருந்திகளி னதும், கூலிகள் உயர்த்தப்பட்டன. பின்பு, அதிகரித்த எண்ணெய்க் கூலியின் இரண்டாந்தரத் தாக்கம் உணரப்பட்டது. இவ்வாறு முக்கியமாக எரிபொரு ளின் விலை அதிகரித்தமையால், உடையும், உணவும் அதிக விலைக்குள்ளாகின.

## அட்டவணை II (ஐ) 2

### வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட மாதத்திற்கான மாற்றங்கள்

| மாதம் | விலை அதிகரிப்புகள் | | விலைக் குறைப்புகள் | |
|---|---|---|---|---|
| | பிரிவு | விடயங்கள் | பிரிவு | விடயங்கள் |
| 1974, சனவரி ... | எரி பொருளும், வெளிச்சமும், | மண்ணெண்ணெய் | உணவு | தேயிலைத் தூள், உள்ளி, எலுமிச்சம் பழம், பருவகால, பருவகாலமற்ற காய்கறிகள். |
| | உணவு | மிளகு, கடுகு, மண(வாசனை)ப் பொருட்கள், புளி, வெந்தயம், விசுக் கோத்து, புதிய மீன், தேங்காய், அப்பளம், இலைக்காய் கறிகள். | | |
| 1974, பெப்புருவரி | உணவு | தேயிலைத்தூள், பழஊறல், விசுக்கோத்து, தேங்காய், அப்பளம். | உணவு | மிளகு, உள்ளி, மண (வாசனை)ப் பொருட் கள், வெந்தயம், புளி, எலுமிச்சம் பழம், பருவகால, பருவகாலமற்றவையும், இலைக் காய்கறிகளும். |
| | எரி பொருளும், வெளிச்சமும், | மண்ணெண்ணெய் | | |
| | பல்வகைப்பட்ட பொருட்களும் | பேருந்துக் கட்டணம், புகையிரதக் கட்டணம், ரயர்களும் ரியூப்புகளும். | — | —— |
| | | | — | —— |
| 1974, மாச்சு ... | உணவு | தேயிலைத்தூள், பருவ காலமற்ற காய்கறிகள், விசுக்கோத்து, புதிய மீன், முட்டை. | உணவு | மண(வாசனை)ப்பொருட்கள், வெந்தயம், புளி இலை வகையும், பருவகாலக் காய்கறிகளும். |
| | பல்வகைப்பட்ட பொருட்கள் | புதினப் பத்திரிகையினதும், சவர்க்காரத்தினதும் சில வகைகள். | — | —— |
| 1974, எப்பிரல் ... | உணவு | தேயிலை, மண (வாசனை)ப் பொருட்கள், வெந்தயம், எலுமிச்சை, கடுகு, பருவ காலமற்ற காய்கறிகள், பழஊறல், விசுக்கோத்து, அப்பளம். | உணவு | புளியும், இலைக் காய்கறிகளும். |
| | உடை | சேட்டுத்துணிகள், காற்சட்டைத் துணிகள், சாரங்கள், வேட்டிகள், சேலைகள், அச்சிடப்பட்ட சீத்தை, சாதாரணத் துணி, லோங் துணி), நரைத்த துணி (கிறே துணி), உள்ளங்கி, துவாய், வீட்டு லினன். | உடை | பட்டுத் துணிகள். |
| 1974, மே ... | உணவு | தேயிலை பீ ஓ. பி., விஞகிரி, புளி, இலைவகையும், பருவ காலக் காய்கறிகளும், தேங்காயெண்ணெய், பழஊறல், இறைச்சி. | உணவு | மண (வாசனை)ப் பொருட்கள், பருவகால மற்ற காய்கறிகள், அப்பளம். |

(தொடர்ச்சி மறுபக்கம்)

| மாதம் | விலை அதிகரிப்புகள் | | விலைக் குறைப்புகள் | |
|---|---|---|---|---|
| | பிரிவு | விடயங்கள் | பிரிவு | விடயங்கள் |
| 1974, யூன் ... | உணவு | மண (வாசனை)ப் பொருட்கள், வெந்தயம், தேங்காயெண்ணெய், காய்கறிகள், விசுக்கோத்து. | உணவு | எலுமிச்சம் பழம், அப்பளம். |
| 1974, யூலை ... | உணவு | மண (வாசனை)ப் பொருட்கள், வெந்தயம், புளி, இலைக்காய்கறிகள், பழ ஊறல், கருவாடு, அப்பளம், முட்டை, விசுக்கோத்து. | உணவு | பருவகால, பருவ காலமற்ற காய்கறிகள். |
| | பல்வகைப்பட்ட பொருட்கள் | மதுபானம். | — | — |
| 1974, ஒகத்து .. | உணவு | கோதுமை மா, பாண், கடுகு, பழ ஊறல். | உணவு | புளி, எலுமிச்சம் பழம், சின்ன வெங்காயம், காய்கறிகள், கிழங்கு வகை, அப்பளம். |
| 1974, செத்தெம்பர் | உணவு | புதிய பால், கட்டிப்பால், கொத்தமல்லி, கடுகு, புளி. | உணவு | அப்பளம், முட்டை. |
| 1974, ஒற்றோபர் ... | எரி பொருளும் வெளிச்சமும் | தீக்குச்சிகள். | — | — |
| | உணவு | புதிய பால், கட்டிப்பால், விசுக்கோத்து, அப்பளம், முட்டை, புளி, பருவகால இலைக்காய் கறிகள். | உணவு | கடுகு. |
| 1974, நவெம்பர் ... | உணவு | கொத்தமல்லி, கடுகு, எலுமிச்சை, சின்ன வெங்காயம், முட்டை, உருளைக் கிழங்கு, பருவகால இலைக்காய்கறிகள். | உணவு | கிழங்கு வகை, விசுக்கோத்து, பருவகால மற்ற காய்கறிகள். |
| 1974, திசெம்பர் .. | உணவு | வினிகிரி, பட்டர், புதியமீன், பருவகால இலைக்காய்கறிகள். | உணவு | கடுகு, மண (வாசனை)ப் பொருட்கள், முட்டை, பருவகாலமற்ற காய்கறிகள். |
| | பல்வகைப்பட்ட பொருட்கள் | மதுபானம், பயிற்சிக் கொப்பிகள். | | |

1973 ஆம் இறுதிக் காலாண்டுப்பகுதியில் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயின் உலகச் சந்தை விலையில் ஏற்பட்ட பெரிதளவான அதிகரிப்பும், 1974ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும், 1974 ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்ப் பொருட்களின் சில்லறை விலைகளை அதிகரிக்கச் செய்தன. உள்நாட்டுப் பெற்றோலியப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அட்டவணை II (ஐ) 3 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஐ) 3

**பெற்றோலிய பொருட்களின் விலைகளின் மாற்றங்கள்**

| உற்பத்தி | 1972 இறுதியில் விலை | 24-8-73 அன்று விலையுயர்ச்சி | விலையுயர்ச்சி 1974 சனவரி | |
|---|---|---|---|---|
| | | | 9 சனவரி | 10 சனவரி |
| 1. மண்ணெண்ணெ ... .. | 1.32 | 1.92 | — | 3.60 |
| 2. பெற்றோல் - சிறந்த ... ... | 5.75 | 6.55 | 12.50 | — |
| 3. பெற்றோல் - தூயஎண்ணெ ... | 5.30 | 6.10 | 12.00 | — |
| 4. பாரியத் தீசல் ... .. | 1.53 | 2.13 | — | 4.60 |
| 5. கைத்தொழில் தீசல் ... | 1.63 | 2.23 | — | 4.90 |
| 6. தன்னியக்க தீசல் ... ... | 2.14 | 2.74 | — | 4.80 |
| 7. உலை எண்ணெய் ... ... | | | | |
| 500 எஸ்ஈசீஎஸ் ... | 1.28 | 1.88 | — | 4.00 |
| 800 எஸ்ஈசீஎஸ் ... ... | 1.23 | 1.83 | — | 3.90 |
| 1000 எஸ்ஈசீஎஸ் ... ... | 1.18 | 1.78 | 3.80 | — |

அதிகரித்துச் செல்லும், எரிபொருட்கள் செலவினாலும், உதிரிப்பாகங்கள், துணைக் கருவிகளின் செலவுகள் அதிகரித்தமையினாலும், அச்செலவுகளுக்கு ஏற்ப, 1974 ஆம் ஆண்டு பெப்புருவரி 4 ஆந் திகதி தொட்டு, இலங்கைப் போக்குவரத்துச் சபை பயணக் கூலிகளை உயர்த்தியது. இதன்படி, முதற்கட்டத்திற்கான ஆகக் குறைந்த பயணக் கூலி 10 சத வீதத்திலிருந்து 20 சத வீதமாக உயர்த்தப்பட்டது. அடுத்த இரண்டு கட்டங்களிலும் ஒவ்வொரு கட்டத்திற்கும், 5 சதத்தால் கூட்டப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்த கட்டங்களுக்கு 10 சதத்தால் கூட்டப்பட்டது. புகைவண்டிப் பகுதி, பயணக் கூலிகளைக் கிட்டத்தட்ட 50 சத வீதம் கொண்ட மேலதிகக் கட்டணத்தினால் உயர்த்தியது. பொதிகள் மீதான கட்டணம் 25 சத வீதத்தால் உயர்த்தப்பட்டது

## கொழும்பு நுகர்வோருக்கான விலைக் குறிகாட்டியில் உட்சேர்க்கப்படாத விலைகள்

மத்திய வங்கியானது, கொழும்பு நுகர்வோருக்கான விலைக் குறிகாட்டியில் சேர்க்கப்படாத ஒரு குறிப்பிட்ட சில பொருட்களின் விலைகளை ஒழுங்காகத் திரட்டுகின்றது. இத்தகவலானது, ஒன்றில் சில்லறை வியாபாரிகளிடம் இருந்து விசாரணைமூலம் நேரடியாகப் பெறுவதன் வாயிலாக அல்லது குறிப்பிட்ட நிறுவனங்களின் வெளியிடப்பட்ட விலைப் பட்டியலில் இருந்து பெறப்படுகின்றது அட்டவணை II (ஐ) 4 இல் 1974 ஆம் ஆண்டிற்கான தெரிந்

தெடுக்கப்பட்ட சில பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தரப் பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுகளிலும் எவ்வாறு விலைகளின் போக்கு இயங்கி வருகின்றது என்பதனைத் தெளிவுபடுத்துவதற்காகப் பொருட்களானவை, நுகர்வோர், நடுத்தரப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் எனப் பாகு படுத்தப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஐ) 4

### கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுள் அடங்காத விலைகள்

| பொருளின் வகை | சதவீத அதிகரிப்பு 1974/73 |
|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | |
| புழுங்கல் அரிசி ... ... ... | வி. கி. |
| தகரத்திலடைத்த மீன் ... ... | + 21 |
| பழஊறல், ஜெலி, சுவைக்கூட்டு, பழரசம் ... ... | + 58—134 |
| பற்பசைகள் ... ... | + 29— 35 |
| ரல்கம் பவுடர் ... ... ... | + 7— 11 |
| ஓடிக்குலோன் ... ... | + 14— 32 |
| சேட்டுக்கள் ... ... | + 29— 1 |
| மெழுகுதிரிகள் ... ... .. | + 87 |
| பலதரப்பட்ட தோல் உற்பத்திகள் ... ... | + 6— 24 |
| கைமின் விளக்கினதும் மின்மப் பெருக்கியினதும் மின்கலங்கள் (ரோச்சினதும், ரான்லிஸ்ரரினதும் பற்றறிகள்) ... ... | + 38— 42 |
| மின் விசிறிகள் ... ... ... | + 56— 80 |
| தையல் எந்திரங்கள் ... ... | + 33— 52 |
| மின் குமிழ்கள் (பல்ப்புகள்) ... ... ... | + 13— 21 |
| மின்சார இணைப்புக்கள் (முக்கியமாக மின்கம்பு வடங்கள்) ... | + 61—100 |
| மோட்டார் வண்டி துணை உறுப்புக்கள் ... ... | + 1—42 |
| மோட்டார் வண்டி மினகலங்கள் ... ... | + 5 |
| **நடுத்தரப் பொருட்கள்** | |
| தாள் ... ... | + 30— 41 |
| பெற்றோல் ... ... ... | + 91—105 |
| செப்புக் கம்பி ... ... ... | + 38—105 |
| எரி சோடா ... ... ... | + 97 |
| உரங்கள் ... ... ... | + 61—110 |
| **முதலீட்டப் பொருட்கள்** | |
| கட்டடப் பொருட்கள் | |
| தாங்குகருவியுள்ள கழுவும் தொட்டி (வேசின்) (22"x15") (உள்ளூர்)... | + 26 |
| தாங்கு கருவியற்ற கழுவும் தொட்டி (22"x15") (உள்ளூர்) ... | + 25 |
| மலசல கூடத் தொட்டி—உள்ளூர் ... | + 18 |
| மண் குழாய்கள் 2''x4'' ... ... .. | + 32 |
| மண்வெட்டி ... ... ... | + 30— 31 |
| இலங்கைக் கோடரிகள் ... ... ... | + 18 |
| காரியம் குறைந்த உருக்கு ... ... .. | + 68— 83 |
| இணைப்புக்கள் ... ... .. | + 27— 50 |
| மோட்டிஸ் கீதவுப் பூட்டுகள் ... ... .. | + 48 |
| ஒட்டோ கம்பிகள் ... ... ... | + 37— 70 |
| தட்டை இணை ... ... ... | + 61—100 |
| றப்பர் எந்திரங்கள் ... ... .. | + 18— 42 |

* பொருட்களின் வகைகளுக்கு எதிராகத் தரப்பட்டுள்ள சதவீத அதிகரிப்புக்கள் அவற்றிற்குரிய பொருட் களின் ஆகக் குறைந்த ஆகக் கூடிய சதவீத அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டும்.

## தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட

| | கூறு | தொழிற் சாலை விலை ரூ. 1973 | தொழிற் சாலை விலை ரூ. 1974 | சதவீத மாற்றம் 1974/73 |
|---|---|---|---|---|
| **1. உணவு, பானங்கள், புகையிலை** | | | | |
| விசுக்கோத்து (கிறீம் கிறேக்கர்ஸ்) ... ... | ஒரு தகரம் | 7.67 | 9.18 | + 20 |
| பால் மா (லக்ஸ்பிறே) .. ... ... | ஒரு றுத். தகரம் | 3.99 | 4.50 | + 13 |
| கட்டிப் பால் ... ... ... ... | 14 அவு. தகரம் | 1.65 | 1.65 | — |
| பட்டர் ... ... ... ... | ஒரு றுத்தல் | 5.40 | 5.40 | — |
| குடி பானங்கள் (போட்டலோ) ... ... | ஒரு போத்தல் | 0.42 | 0.88 | +110 |
| குடிபானங்கள் (சோடா) ... .. .. | ,, ,, | 0.22 | 0.30 | + 36 |
| பழச்சாறு (பசோறு) ... ... ... | ,, ,, | 5.60 | 11.95 | +113 |
| பழச்சாறு (ஆரஞ்சு) ... ... ... | ,, ,, | 6.00 | 11.95 | + 99 |
| ஓலண்ட் பிறைட் புகையிலை ... ... | ஒரு றுத்தல் | 56.45 | 56 45 | — |
| திறிறேசஸ் சிகரட்டு ... .. ... | ஆயிரம் | 139.55 | 139.55 | — |
| **2. ஆடைவகைகளும் உடைகளும்** | | | | |
| துணி (எல். டி. எம்.) வெள்ளை ... ... | ஒரு யார் | 2.85 | 3.15 | + 11 |
| துணி எல். டி. எம்.) நிறமூட்டப்பட்டது) .. ... | ,, ,, | 3.35 | 3.55 | + 6 |
| பப்ளின் — வெள்ளை ... ... ... | ,, ,, | 3.65 | 3.85 | + 5 |
| வோயில் — வெள்ளை ... .. . | ,, ,, | 2.90 | 3.10 | + 7 |
| நூல் 30 கோண்டவை .. ... . | ஒரு றுத்தல் | 7.20 | 8.70 | + 21 |
| சீலை பப்றிக் (அச்சிடப்பட்டவை) 44′ × 45″ ... | ஒரு யார் | 9.33 | 11.55 | + 24 |
| சேட்டுத் துணி (ரெக்ரோன் பருத்தி) 35″/36″ .. | ,, ,, | 15.00 | 16.00 | + 7 |
| உடைக்கான பப்றிக் (நைலோன் சற்றின்) 35″/36″ ... | ,, ,, | 9.00 | 10.15 | + 13 |
| சேலை (சீசில்க்) 44″/45″ ... ... | ,, ,, | 10.46 | 10.46 | — |
| சேட்டுத் துணி (சீசில்க் சில்வர்லைன்) 35″/36″ ... | ,, ,, | 11.50 | 11.50 | — |
| காற்சட்டைத் துணி (சீசில்க்-கபிரான்) 27″/28″ ... | ,, ,, | 22.33 | 23.50 | + 5 |
| **3. மருந்து வகைகளும் குளியலறைத் தயாரிப்புப் பொருட்களும்** | | | | |
| பிகாடெக்ஸ் குளிகைகள் ... .. | 1000 | 47.05 | 47.05 | — |
| சி–பி குளிகைகள் (விட்டமின் சி–பி குளிகைகள்) .. | 1000 | 62.70 | 62.70 | — |
| ரெருமைசின் குளிகைகள் ... ... .. | 100 வில். போத். | 69.50 | 85.16 | + 23 |
| ஒப்றன் (குளிகைகள்) ... ... | 30 ,, ,, | 6.61 | 6.61 | — |
| டியூறேல் ... ... .. ... | 1 போத்தல் | 4.05 | 4.05 | — |
| வாட்டர்பரீஷ் விட்டமின் ரொனிக் ... ... | ஒருபோத்தல் 6 அவு. | 3.47 | 4.24 | + 22 |
| பென்சிலின் 'ம்' டியூமெக்ஸ் .. ... | போத்தல் | 64.00 | 69.33 | + 8 |
| சலவைச் சோடா ... ... .. | லோங். தொன் | 2,038.40 | 3,567.00 | + 75 |
| குளோறின் திரவகம் ... ... | ,, ,, | 2,755.20 | 3,384.00 | + 23 |
| கல்சியம் குளோறைட் ... ... ... | ,, ,, | 1,500.00 | 1,500.00 | — |
| **4. தளபாடங்களும் வீட்டுத் தளபாடங்களும்** | | | | |
| அலுவலக அலுமாரி (உருக்கு) ... .. | 1 | 575.00 | 1,090.00 | + 90 |
| கோவை அலுமாரி (உருக்கு) .. | 1 | 590.00 | 1,135.00 | + 92 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/36″ சாதாரணம்) ... ... | 1 | 140.25 | 205.00 | + 46 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/48″ அலங்காரம்) .. | 1 | 182.75 | 290.00 | + 59 |
| இரப்பரும் தும்பும் கலந்த மெத்தை (72″/60″ அதிவிசேடம்) ... ... ... | 1 | 289.00 | 390.00 | + 35 |

(தொடரும்)

## அட்டவணை II (ஐ) 5

## பொருட்களின் மொத்த விற்பனை விலைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **5. இரும்பும், மின்சாரப் பொருட்களும்** | | | | |
| வட்ட எம். எஸ். உருக்கு ½'' ... | மெற்றிக் தொன் | 2,470.00 | 4,050.00 | + 64 |
| வட்ட எம். எஸ். கோணங்கள் 1×1×⅛'' ... | ,, | 2,535.00 | 4,115.00 | + 62 |
| கட்டும் கறுப்புக் கம்பி ... | ,, | 2,790.00 | 5,360.00 | + 92 |
| முள்ளுக் கம்பி (5.6 மி. மீ.) .. | 56 இரு. | 80.50 | 132.00 | + 64 |
| மண்வெட்டி (லங்காலோக) (7''x10'') ... | 1 | 17.05 | 17.60 | + 3 |
| கோடரிகள் (லங்காலோக) (5.6 மி. மீ) (நேரான) ... | 1 | 21.69 | 30.55 | + 41 |
| கம்பி ஆணி ... | மெற்றிக் தொன் | 2,695.00 | 4,770.00 | + 77 |
| பி.வி.சி.மின்சாரம் பாயாமல் மூடப்பட்ட கம்பிகள் 1/044 | 100 யார் | 36.60 | 70.00 | + 91 |
| 100 அடி ஒட்டோக் கம்பிகள் 35/012 ... | | 26.85 | 42.00 | + 56 |
| பொதுவான வெளிச்சங் கொடுக்கும் விளக்குகள் (25வா.) | 1 | 2.39 | 2.87 | + 20 |
| சிறப்பான விளக்குகள் (15 வா.) | 1 | 2.48 | 2.97 | + 20 |
| பகல் வெளிச்சம் பல்ப்புகள் (60 வா.) ... | 1 | 2.65 | 3.24 | + 22 |
| **6. கைத்தொழில், வர்த்தக, வேளாண்மை இயந்திரங்களும் சாதனங்களும், மோட்டார் வாகனங்களும். டயர்களும், ரியூப்புக்களும்** | | | | |
| லோட்டஸ் ஈருருளி டயர்கள் 28×1½'' ... | 1 | 9.00 | 11.30 | + 26 |
| லோட்டஸ் அதிகவரி டயர்கள் 28×1½'' ... | 1 | 10.75 | 13.55 | + 26 |
| லோட்டஸ் பொருத்தற்ற ரியூப்புக்கள் 26 x 13/8'' ... | 1 | 3.95 | 5.30 | + 34 |
| தையல் இயந்திரங்கள் (266 எச்/55 சிங்கர்) ... | 1 | 717.00 | 926.20 | + 29 |
| தையல் இயந்திரங்கள் (237எம்/டபி. சிங்கர்) ... | 1 | 1,024.00 | 1,289 17 | + 26 |
| சென்றிக் பிஸ்ரன் நீர் இறைப்பு ¾'' (75/1) ... | 1 | 1,211.00 | 2,041.50 | + 69 |
| சென்றிக் கைத்தொழில் நீர் இறைப்பு இயந்திரம் 1¼1'' (140/3) ... | 1 | 1,609.00 | 1,845.00 | + 15 |
| சென்றிக் வேளாண்மை நீர் இறைப்பு இயந்திரம் 2'' (ஈ. கே. ஜே.) ... | 1 | 1,706.00 | 3,386.50 | + 99 |
| மேசை விசிறி ... ... | 1 | 531.75 | 718.00 | + 35 |
| கால் விசிறி 16'' ... .. .. | 1 | 604.00 | 832.75 | + 38 |
| **7. வேளாண்மை மூலப் பொருட்கள்** | ஒரு தொன் | | | |
| காய்கறிக்கான சிறப்பு உரம் (இல.1) ... ... | ,, | 524.16 | 900.92 | + 72 |
| நெல் கலப்புச் சிறப்பு உரம் ... ... | ,, | 642.16 | 939.18 | + 46 |
| சாம்பலுப்புக் கலந்த பாசிகை (60%) ... ... | ,, | 728.33 | 850.17 | + 17 |
| யூறியா ... ... | ,, | 865.00 | 1,540.00 | + 78 |
| அமோனியாவின் சல்பேற்று ... ... | ,, | 572.50 | 767.17 | + 34 |
| சபொஸ் பொஸ்பேற்று ... ... | ,, | 420.83 | 532.00 | + 26 |
| அக்ரோ இரசாயணப் பொருட்கள் (டி.டி.ரி. 25% ஈசி) ... | கலன் ஒன்று | 6.80 | 6.80 | — |
| ,, (திரியன் 2 ஈ) ... ... | ,, | 11.50 | 11.50 | — |
| **8. மர கட்டடப் பொருட்கள்** | | | | |
| 'கொறிகேற்றற் சீற்' ... ... ... | ஒரு சதுர அடி | 1.14 | 1.23 | + 8 |
| தட்டை சீற் . ... ... | ,, | 0.77 | 0.88 | + 14 |
| சீமேந்து (காங்கேசன்துறை) ... ... | அந்தர் ஒன்று | 12.00 | 14.50 | + 21 |
| சீமேந்து (ருகுணு) ... ... ... | ,, | 13.00 | 14.67 | + 13 |
| சீமேந்து (புத்தளம்) ... ... ... | ,, | 12.50 | 14.58 | + 17 |
| **9. பல்வகைப் பொருட்கள்** | | | | |
| மின்னொளி பற்றறி ... ... ... | 1 | 0.83 | 1.21 | + 46 |
| ருன்சிஸ்ரர் பற்றறி ... ... ... | 1 | 0.93 | 1.31 | + 41 |
| றேடியோ பற்றறி ... ... ... | 1 | 33.50 | 35.70 | + 7 |
| தன்னியக்க பற்றறி 6 வோ 60 ... ... | 1 | 150.00 | 150.00 | — |
| தன்னியக்க பற்றறி 12 வோ 60 ... ... | 1 | 245.00 | 245.00 | — |
| றீம்களிலான எழுதும் தாள்கள் ... | 500 தாள்கள் | 43.20 | 52.50 | + 22 |
| தட்டச்சுக் காபன் 8''×10'' ... ... ... | 1 பெட்டி | 16.00 | 17.90 | + 12 |
| தரை மினுக்கி ... ... ... | 1 ரு. தகரம் | 5.65 | 6.95 | + 23 |
| மோட்டார் மெழுகு ... ... .. | ½ ரு. தகரம் | 6.80 | 8.00 | + 18 |
| தீக்குச்சிகள் ... ... ... ... | 1 கூட்டு (7200 பெட்டிகள்) | 349.08 | 454.50 | + 30 |
| பெயின்ட் ( )... ... .. | 112 ருத்தல் | 180.00 | 200.00 | + 11 |
| பெயின்ட் ( )... ... ... | 112 ருத்தல் | 128.00 | 144.00 | + 13 |

பொதுவில் 1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு வீதங்கள் 1973 ஆம் ஆண்டிலும் பார்க்க, கணிசமானளவு உயர்ந்திருந்தமையை, நுகர்ச்சிப் பொருட்கள் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட விலை மாற்றங்கள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக 1973 ஆம் ஆண்டில் பழப்பாகு, பாகு, பழக் கூட்டு, பழச்சாறு என்பவற்றின் விலை அதிகரிப்புக்கள் 7 சத வீதத்திலிருந்து 51 சத வீதமாக அமைந்திருக்கையில், 1974 ஆம் ஆண்டில் அவ்வதிகரிப்புக்கள் 58 சத வீதத்திலிருந்து 134 சத வீதமாக இருந்தன. இடைநிலைப் பொருட்களைப் பொறுத்தவரையில், 1974 ஆம் ஆண்டிற்கான விலை அதிகரிப்புகள் முன்னைய ஆண்டிலும் பார்க்கப் பெரிதளவாகக் காணப்பட்டன. 1973 ஆம் ஆண்டில், இப்பிரிவில் பதிவுசெய்யப்பட்ட ஆகக் குறைந்த விலை அதிகரிப்பு 4 சத வீதமாக (எரி சோடா) விளங்க, இதனைத் தொடர்ந்த ஆண்டில் ஆகக் குறைந்த அதிகரிப்பு 30 சத வீதமாக இருந்தமை நோக்கலாம். 1974 ஆம் ஆண்டில் சில பொருட்களின் விலைகள் 1973 ஆம் ஆண்டு விலைகளைவிட 100 சத வீதத்தால் அதிகரித்தமை கவனிக்கப்படற்பாலதாகும். அட்டவணை 4 இல் தரப்பட்ட எண் தொகைகள், 1974ம் ஆண்டில் இடை நிலைப் பொருட்களின் விலைகள் உயர்ந்து சென்ற போக்கினை உறுதிசெய்கின்றன. மேலும், மென் உருக்கு, கதவுப் பூட்டுகள், தாளுகை இயங்கும் கம்பிகள், தட்டையான, இரட்டைப்படிவான கம்பிகள் றப்பர் இயந்திரவகைகளின் விலைகள் கணிசமானளவாக உயர்ந்தமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அநேக கைத்தொழில் நிறுவனங்கள் அவர்களுடைய உற்பத்திப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கான காரணங்களை சுருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளன. அடிக்கடி எடுத்துக் காட்டப்பட்ட காரணங்கள், மூலப் பொருட் செலவு, கூலிகள் எரிபொருட் செலவுகள், இறக்குமதி விலைகள், மொத்த விற்பனவு வரி, மேலதிகச் செலவுகளுடன் தொடர்புபட்டுக் காணப்படுகிறது. கைத்தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திச் செலவு முறைத் தரவுகளை வழங்குவதில்லை. இக்காரணத்தினால், மூலப் பொருட்களின் விலை அதிகரிப்புகளினால் ஏற்பட்ட தாக்கத்தை ஒரு புறத்தில் வேறுபட்ட பொருட்களின் உற்பத்திச் செலவிலும், மறுபுறத்தில் அவற்றின் விலைகளிலும் கணிப்பது முற்றிலும் இயலாததொன்றாகும்.

**உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த விற்பனை விலைகள்**

மத்திய வங்கியானது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த விற்பனை விலைகளை, ஒரு ஒழுங்குமுறையில் ஆண்டாண்டாகத் திரட்டுகிறது இம்மொத்த விற்பனை விலைகள் ஒன்றில் தயாரிப்பாளர்களிடமிருந்து நேரடியாக அல்லது அவர்களுடைய முகவர்களிடமிருந்து பெறப்படுகிறது. அட்டவணை II (ஐ) 5 ஆனது, 1973-74 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சில முக்கியமான பொருட்களுக்குக் கணிக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட விலைகளுக்கான காரணங்கள்பற்றிய தகவல்களையும் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் வழங்கியுள்ளார்கள். விலை அதிகரிப்பினையிட்டு அடிக்கடி எடுத்துக் கூறப்பட்ட காரணங்கள், எரிபொருள் (உணவு, குடிபானங்கள், எரி சோடா) சீனி விலை (உணவு குடிபானங்கள், எரி சோடா, உருக்கு, தந்திக்கம்பிகள், தையல் இயந்திரங்கள், சீமெந்து) கூலிச் செலவுகள் (எரிசோடா) மொத்த விற்பனை வரி (இயந்திர வகையும் சாதனங்களும், தளபாடங்களும்) என்பவற்றின் விலை அதிகரிப்புகளுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டன.

1975 ஜூலை 28

**விலைக் கட்டுப்பாடுகளும் பங்கீட்டு முறையும்**

கடந்த சில வருடங்களாக அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை கூட்டு நடவடிக்கையில், விலைக்கட்டுப்பாடுகளும், பங்கீட்டு முறையும் முக்கிய பகுதிகளாக அமைந்துவிட்டன. பண வீக்கத்தினை முறியடிப்பதிலும், முக்கிய பண்டங்களின் நியாயமான பங்கீட்டு முறையினை உறுதி செய்வதிலும் இந்நடவடிக்கைகளின் தாக்கத்தினைத் திட்பமாக அளவிடமுடியாது. 1974 ஆம் ஆண்டிற்கான பொதுவிலை மட்டத்தில் விலைக் கட்டுப்பாடும், பங்கீட்டு முறையும் எவ்வளவு தூரம் தாக்கத்தினை ஏற்படுத்தியுளது என்ற பார்வையில், இவற்றில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்களைச் சுட்டிக்காட்டலே இப்பிரிவின் நோக்கமாகும்.

கடந்த சில ஆண்டுகளில் பல பொருட்கள் விலைக்கட்டுப்பாட்டுக்குள்ளாயின. 1974 இல் பின்வரும் பொருட்கள், இப்பட்டியலிற் சேர்க்கப்பட்டன. ஈருருளிகள், பாலூட்டிப் போத்தல்கள், பென்சில்கள், களனி டயர்களும், டியூப்புக்களும், விட்டாமோல்ட் மோல்ரட் பால், சீமெந்து 7 இருத்தல் பைகளில். அதேவேளை பல விடயங்கள் விலைக்கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. அவைகளாவன, குடைகள், மண்வெட்டிகள், பருப்பும், சஸ்டேஜனும் ஆகும்.

1974 ஆம் ஆண்டில் கட்டுப்பாட்டு விலைகள் கணிசமானளவாய் மாற்றி அமைக்கப்பட்டது. பெரும்பான்மையானவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. மாதிரி விடயங்களின் விலை மாற்றங்களை அட்டவணை II (ஐ) 6 காட்டுகின்றது. பல்வகைப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் கட்டுப்பாட்டு விலை ஆகக் குறைந்தது 40 சத வீதத்தால் உயர்த்தப்பட்டமை புலப்படுகின்றது. தட்டைக் கண்ணாடிகளுக்கான உயர் கட்டுப்பாட்டு விலைகள் 15 சத வீதம் முதல் 50 சத வீதம்வரைக்குள் நிலவின. பல்வகைப்பட்ட இலக்ஸ்பிறே உற்பத்திகளின் கட்டுப்பாட்டு விலைகள், முதலில் குறிப்பிடத்தக்களவு உயர்த்தப்பட்டன. எனினும், பின்னர், கட்டுப்பாட்டு விலைகள் நடுத்தரமான மட்டத்திற்கு கொணரப்பட்டன. களனி டயர்கள், டியூப்புகளுக்கான கட்டுப்பாட்டு விலை 20–30 சத வீதத்தால் உயர்த்தப்பட்டது. பல்வகைப்பட்ட கல்நார் (அஸ்பெஸ்டோஸ்) தகடுகளுக்கான கட்டுப்பாட்டு விலை உயர்ச்சி 11 சத வீதத்திற்கும் மேலாகும்.

1974 இல் இன்றியமையாப் பொருட்களின் பங்கீட்டுத் திட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆண்டுத் தொடக்கத்தில் (1.3.1974) ஆளொன்றுக்கான மாதாந்த சீனிப்பங்கீடு $\frac{3}{4}$ இருத்தலிலிருந்து 1 இருத்தலால் உயர்த்தப்பட்டது. பின்கூறில் (1.1 74) இது $\frac{3}{4}$ இருத்தலிற்குக் குறைக்கப்பட்டது, இவ்வாறு குறைப்பதற்கு உலகச் சந்தையில் சீனிக்கு நிலவிய தட்டுப்பாடும் பின்னர் அதன் விலையுயர்ச்சிகளும் ஏதுக்களாக அமைந்தன. 1974 இன் இறுதியில், கொழும்பிலும் சுற்றுடலிலும் ஆளுக்கான கிழமை மாப்பங்கீடு, 1 இருத்தலாகக் கூட்டப்பட்டது. பெருந்தோட்டப்பகுதிகட்கு $1\frac{1}{2}$ இருத்தலாக கூட்டப்பட்டது. குழந்தைப் பாலுணவுகளைப் பொறுத்தவரையில் பங்கீட்டுத் திட்டமொன்று கொழும்பு நகரத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

# அட்டவணை II (ஐ) 6

## கட்டுப்பாட்டு விலைகளின் திருத்தம்

| விடயங்கள் | திகதி | பழைய விலை | புதிய விலை | சதவீத மாற்றம் | திகதி | புதிய விலை | சதவீத மாற்ற |
|---|---|---|---|---|---|---|---|
| மான்டில்கள் | | | | | | | |
| 'லொசன்' சின்னம் ... ... | 25.1.74 | — | 8.25 | — | | | |
| 'லிரெக்ஸ்' சின்னம் ... ... | 28.3.74 | — | .50 | — | | | |
| 22'' நடுத்தர ஈருருளிகள் ... ... | 23.12.74 | 500.00 | 595.00 | + 19.0 | | | |
| சஸ்ரஜன் ... ... ... | 29.4.74 | — | 19.45 | — | | | |
| பயிற்சிப் புத்தகங்கள் | | | | | | | |
| 40 பக்கங்கள் ... ... | 13.6.74 | .25 | .40 | + 66.0 | | | |
| 80 பக்கங்கள் ... ... | ,, | .45 | .75 | + 66.7 | | | |
| மொனிற்றர் பயிற்சிப் புத்தகங்கள் | | | | | | | |
| 80 பக்கங்கள் .. ... | ,, | .75 | .95 | + 26.7 | | | |
| 120 பக்கங்கள் ... ... | ,, | 1.00 | 1.30 | + 30.0 | | | |
| 160 பக்கங்கள் .. ... | ,, | 1.25 | 1.70 | + 36.0 | | | |
| 200 பக்கங்கள் ... ... | ,, | 1.45 | 2.10 | + 44.8 | | | |
| 240 பக்கங்கள் ... ... | ,, | 1.75 | 2.50 | + 42.9 | | | |
| 280 பக்கங்கள் ... ... | ,, | 2.00 | 2.90 | + 45.0 | | | |
| 320 பக்கங்கள் ... ... | ,, | 2.25 | 3.30 | + 46.7 | | | |
| தட்டைக் கண்ணடி | | | | | | | |
| 2 மி. மி. சதுர அடி ... ... | 11.6.74 | 1.00 | 1 50 | + 50.0 | | | |
| 3 மி. மி. சதுர அடி ... ... | ,, | 2.00 | 2 98 | + 49.0 | | | |
| 4 மி. மி. சதுர அடி ... ... | ,, | 4.40 | 5.28 | + 20.0 | | | |
| 5 மி. மி. சதுர அடி ... ... | ,, | 4.90 | 5.65 | + 15.3 | | | |
| 6 மி. மி. சதுர அடி .. ... | ,, | — | 6.95 | — | | | |
| அஸ்பெஸ்டஸ் தகடுகள் | | | | | | | |
| யானைச்சின்ன 'மஸ்கனேற்' கொறுகேற்றற் தகடு | 18.7.74 | 1.19 | 1.41 | + 18.5 | | | |
| யானைச் சின்ன 'மஸ்கனேற்' அரைவாசி கொறுகேற்றற் தகடு... ... | ,, | 1.08 | 1.24 | + 14 8 | | | |
| யானைச்சின்ன 'மஸ்கனேற்' சிறியபகுதி கொறுகேற்றற் தகடு... ... ... | ,, | 1.04 | 1.24 | + 16.3 | | | |
| யானைச் சின்ன 'மஸ்கனேற்' தட்டை கொறுகேற்றற் தகடு ... ... | ,, | .06 | 1 01 | + 17.4 | | | |
| லயனேற் சின்ன நடுத்தர பாரமுடைய கொறுகேற்றற் தகடு ... ... ... | ,, | 1.19 | 1.33 | + 11.8 | | | |
| லயனேற் சின்ன பாரமற்ற கொறுகேற்றற் தகடு | ,, | .99 | 1.11 | + 12.1 | | | |
| லயனேற் சின்ன தட்டை கொறுகேற்றற் தகடு | ,, | .86 | .96 | + 11.6 | | | |
| கொத்தமல்லி ... ... ... | 26.7.74 | .89 | .95 | + 6.7 | | | |
| போமிக் திராவகம் | | | | | | | |
| 35 கிலோகிறும் தகரத்தில் 85 அல்லது 90 சதவீதம் அடைக்கப்பட்டது ... | 12.9.74 | 253.70 | 356.10 | + 40.4 | | | |
| ஒரு இம்பீரியல் கலனுக்கு 85 அல்லது 90 சதவீதம் | ,, | 36.00 | 54.80 | + 52.2 | | | |
| 85 அல்லது 90 சதவீதம் கொண்ட பைந்து... | ,, | 4.50 | 6.85 | + 52.2 | | | |
| பாற் பொருட்கள் (உற்பத்திகள்) | | | | | மீள் பார்வையிடப்பட்டது | | |
| லக்ஸ்பிறே 1 இரு. உறை ... ... | 16.9.74 | 4.35 | 7.50 | — | 28.10.74 | 5.50 | + 26.4 |
| லக்ஸ்பிறே 1 இரு. தகரம் . ... | ,, | 4 75 | 8.00 | — | ,, | 6.00 | + 26.3 |
| ல்க்ஸ்பிறே 2½ இரு. தகரம் ... ... | ,, | 11.50 | 18.00 | — | ,, | 14.00 | + 21.7 |
| கட்டிப் பால் 14 அவுன்ஸ் தகரம்... ... | ,, | 1.75 | 3.25 | + 85.7 | | | |
| விடாமால்ட் மால்டட பால் 1 இரு. தகரம் ... | ,, | 6.50 | 8.50 | + 30.8 | | | |
| விடாமில்க் 1 இரு. தகரம் ... ... | ,, | 3.90 | 4.20 | + 7.7 | | | |
| விடாமில்க் 2½ இரு. தகரம் ... .. | ,, | 8.75 | 9.75 | + 11 4 | | | |
| மான்டில்கள் | | | | | | | |
| 'லக்சன்' சின்னம் ... ... | 30.9.74 | 8.25 | 15.25 | +84.29 | | | |
| 'லிற்ரெக்ஸ்' சின்னம் .. ... | ,, | .50 | .70 | + 40.0 | | | |
| 'ரேயல்' சின்னம் ... ... | ,, | — | .65 | — | | | |
| ரயர்களும் ரியூப்புகளும் (இறக்குமதி) ... | 21.5.74 | — | — | — | | | |
| ரயர்களும் ரியூப்புகளும் 'கெலனி' (உள்நாடு) ... | 10 12.74 | — | — | +25-35% (ரயர்கள்) +20-3% (ரியூப்புகள் | | | |
| சீமேந்து | | | | | | | |
| 7 இரு. உறை (பைகள்) ... ... | 6 11.74 | — | 2.00 | — | | | |
| 110 இரு. உறை (பைகள்) ... ... | 13.12.74 | — | 24.50 | — | | | |

விலைக் கட்டுப்பாடு காப்பு, பங்கீட்டு செயற்றிட்டம், என்பன மிகவும் சிக்கல்வாய்ந்தனவாகும். செயலாட்சிமுறையில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளி லிருந்து நுகர்வோருக்குக் கிட்டக் கூடிய பயன்கள் பல திறப்பட்ட காரணிகளில் தங்கியுள்ளன. ஒரு பகுதியான காரணிகள் திட்டங்களுடன் இணைந்துள்ளன. ஒருவகையில் விலைகள் நியாயமான மட்டங்களில் உற்பத்தியாளரினதும், நுகர்வோரினதும் கருத்திற்கேற்ப விதிக்கப்படல் வேண்டும் மறுபுறத்தில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுவதற்கு, செயலாட்சி அமைப்பு நிறைவு உடையதாக இருத்தல் வேண்டும். இன்னொரு பகுதிக் காரணிகள் பங்கீட்டு வேலைத் திட்டத்துடனும், நாட்டின் வணிக நடைமுறைகளுடனும், தொடர் புடையதாகக் காணப்படுகின்றது. நுகர்வோர் விலைகளின் மட்டத்தைக் குறிப்பாகப் பாதிக்கும் வகையில் பொதுவில் விலைக் கட்டுப்பாடுகளில் குறிப்பாக வணிக நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் 1974ம் ஆண்டில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

## 2. கூலிகள்

தொழில் நுட்ப எழுதுவினைஞர்கள், சிற்றூழியர், அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகியோருக்கான மத்திய வங்கியின் கூலியளவு குறிகாட்டிகள் அவ்வுறுப்பினர்கட்குரிய குறைந்தளவு ஊதியங்கள் கூலிகள் கொடுக்கவேண்டிய படிகள் என்பனவற்றின் அளவுகள் அடிப்படையில் அமைந்தன. எனவே மிகை நேர உணவுப்படிகள் கொடுப்பனவுகள் முதலியன உள்ளடக்கப்படவில்லை. தனியார் துறை கூலிச்சேவைகட்குட்பட்ட வேளாண்மை, கைத்தொழில், வணி கம் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்கான கூலியளவு குறிகாட்டிகள், தொழில் திணைக்களத்தால் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இக்குறிகாட்டிகள் கூலிச்சபைகளால் வகுக்கப்படும் குறைந்த கூலியளவுகளின் அடிப்படையில் அமைகின்றது; 1967 திசெம்பர் முதல் மதிப்பிறக்கப்படிகளையும் உள்ளடக்கு கின்றன. மேலே குறிக்கப்பட்ட கூலியளவு குறிகாட்டிகள் உண்மையான உழைப்புகளை, எனின், தனியார் துறையில் உந்தல் அல்லது மிகை நேரத்து டன் சிறப்புக் கொடுப்பனவுகளான மிகையூதியம் என்பனவற்றைக் காட்டுவ தாக இல்லை; ஆனல் அரசாங்கத்துறை உள்ளடக்கும், கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் பெயரளவிலான கூலி அளவை மதிப்பிறக்கம் செய்வதன் மூலம் உண்மைக் கூலி அளவுக் குறிகாட்டிகள் கணிக்கப்படுகின்றன.

1973/74 ஆம் ஆண்டின் அரச, ஊழியர்களது ஆண்டு காலாண்டுக் கூலி யளவுக் குறிகாட்டிகளை அட்டவணை II (ஐ) 7 காட்டுகிறது. 1973ஐ விட 1974 இல் சராசரியளவில் எல்லாப் பிரிவு அரச ஊழியர்களது பெயரளவு கூலியளவுகள் உயர்ந்திருந்தன. மத்திய அரசு ஊழியர்களது கூலியளவுகள் 1973 இன் மட்டத்திலும் 1974 இல் 12.6 சதவீதத்தால் உயர்ந்தது. அதே வேளை மட்டளவு கூலிகளின் உயர்ச்சிகள் சிற்றூழியர்கட்கு 13.5 சதவீதமாக வும், தொழில்நுட்ப எழுதுவினைஞர் அலுவலர்கட்கு 11.3 சதவீதமாகவும் அமைந் தன. அரசப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் தங்களது பெயரளவு கூலிகளை 10 சத வீதத்தால் உயர்த்திக்கொண்டனர்.

## அட்டவணை II (ஐ) 7

### அரசாங்க ஊழியர்களின் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் (1952 = 100)

| | தொழில்நுட்ப எழுதுவினைஞர் தர ஊழியர்கள் | | சிற்றூழியர்கள் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் (அ) | | அரசாங்கப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி வீதக்குறி காட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | கூலி வீதக் குறி காட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | கூலி வீதக் குறி காட்டி | உண்மைக் கூலிவீதக் குறி காட்டி | கூலி வீதக் குறி காட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி |
| **1973 சராசரி ..** | **163.0** | **98.6** | **194.2** | **117.5** | **180.1** | **108.8** | **144.3** | **87.3** |
| 1ஆம் கால் ... | 160.2 | 101.6 | 189.9 | 120.4 | 176.5 | 111.9 | 142.4 | 90.3 |
| 2ஆல் கால் | 160.2 | 99.3 | 189.9 | 117.7 | 176.5 | 108.7 | 108.4 | 88.3 |
| 3ஆம் கால் .. | 160.2 | 95.5 | 189.9 | 113.2 | 176.5 | 105.2 | 142.4 | 84.9 |
| 4ஆம் கால் ... | 171.3 | 98.0 | 207.2 | 118.6 | 190.9 | 109.3 | 149.8 | 85.7 |
| **1974 சராசரி ...** | **181.4** | **97.7** | **220.5** | **118.7** | **202.8** | **109.2** | **159.1** | **85.7** |
| 1ஆம் கால் ... | 171.3 | 96.1 | 207 2 | 116.2 | 190.9 | 107.1 | 149.8 | 84.0 |
| 2ஆம் கால் .. | 184.8 | 101.1 | 224.9 | 123.1 | 206.8 | 113.2 | 162.2 | 88.8 |
| 3ஆம் கால் .. | 184.8 | 98.0 | 224.9 | 119.3 | 206.8 | 109.7 | 162.2 | 86.0 |
| 4ஆம் கால் ... | 184.8 | 95.6 | 224.9 | 116.3 | 206.8 | 106.9 | 162.2 | 83.9 |
| 1974 இலிருந்து 1973 இல் சதவீத மாற்றம் | + 11.3 | — 0.9 | + 13.5 | + 1.0 | + 12.6 | + 0.4 | + 10.3 | — 1.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், சிற்றூழியர்களுக்கான குறிகாட்டி.

குறிப்பு: குறிகாட்டிகளாவன 1959 செத்தெம்பர் 30 இல் வேலைக்கமர்த்தப்பட்டோரின் அடிப்படையில் ஒரு நிலையான மதிப்பீட்டிற் கணிக்கப்படுகின்றன. குறிகாட்டிகளைக் கணக்கிடுவதில் பயன்படும் கூலிவீதங்கள், ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களுக்குரிய தொடக்கச் சம்பளம், கூலிகள் படிகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளன.

கூலிச் சபைகட்குட்பட்ட தொழிலாளர்களின் கூலியளவு குறிகாட்டிகளை அட்டவணை II (ஐ) 8 காட்டுகின்றது. கூலிச் சபைகட்குட்பட்ட ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 1974 இல் போதுமானளவு உயர்ந்திருந்தன. எடுத்துக் காட்டாக. வேளாண்மை ஊழியர்களின் குறைந்த கூலியளவுகள் குறிகாட்டி 1973 இன் சராசரி மட்டமான 168.1 லிருந்து 1974 இல் 210.0 ஆக உயர்ந்து, ஏறக்குறைய 25 சத வீத உயர்வைக் காட்டுகிறது. 1974 இன் கைத்தொழில் வணிக ஊழியர்களது கூலிகளின் உயர்வுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 18 சத வீதத்தால் உயர்வாகும்.

### அட்டவணை II (ஐ) 8

### கூலி நிருணய சபைக்குட்பட்ட தொழில்களிலுள்ள ஊழியர்களின் ஆகக் குறைந்த மட்டக் கூலி வீதக் குறிகாட்டி எண்கள் (1952 = 100)

| | விவசாயத் தொழிலாளர்கள் (அ) | | கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் (ஆ) | | கூலி நிருணய சபைக்குட்பட்ட தொழிலாளர்கள் (இ) | |
|---|---|---|---|---|---|---|
| | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி |
| 1973 சராசரி | 168.1 | 101.5 | 199.7 | 120.7 | 169.9 | 102.7 |
| 1 ஆம் காற்பகுதி | 158.8 | 100.7 | 191.7 | 121.5 | 162.1 | 102.8 |
| 2 ஆம் காற்பகுதி | 160.4 | 99.4 | 194.0 | 120.2 | 163.9 | 101.5 |
| 3 ஆம் காற்பகு | 165.7 | 98.7 | 196.0 | 116.8 | 168.6 | 100.5 |
| 4 ஆம் காற்பகு | 187.4 | 107.3 | 217·4 | 124.4 | 184.6 | 105.7 |
| 1974 சராசரி | 210.0 | 113.0 | 235.8 | 126.9 | 212.5 | 114.3 |
| 1 ஆம் காற்பகுதி | 191.2 | 107.2 | 218.4 | 122.5 | 194.0 | 108.8 |
| 2 ஆம் காற்பகுதி | 211.7 | 115.9 | 240.0 | 131.3 | 214.4 | 117.3 |
| 3 ஆம் காற்பகுதி | 215.8 | 114.4 | 241.3 | 128.0 | 218.1 | 115.7 |
| 4 ஆம் காற்பகுதி | 221.4 | 114.5 | 210.3 | 126.0 | 223.5 | 115.6 |
| சதவீத மாற்றம் – 1973இல் இருந்து 1974 இற்கு | + 24.9 | + 11.3 | + 18.1 | + 5.1 | + 25.1 | + 11.3 |

மூலம்: தொழிற்றிணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

அ. தேயிலை வளர்ப்பும் அதன் தயாரிப்பும், றப்பர் வளர்ப்பும் அதன் தயாரிப்பும், தெங்கு வளர்ப்பும் ஆகிய துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

ஆ. தெங்குப் பொருட்கள் உற்பத்தி, பொறியியல், அச்சடித்தல், தீப்பெட்டி உற்பத்தி, வாகனப் போக்குவரத்து, கப்பற்றுறைமுகம், துறைமுகப் போக்குவரவு, தேயிலை ஏற்றுமதி, றப்பர் ஏற்றுமதி, திரைப்படம், கட்டடத் தொழில் என்னும் துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

இ. வேளாண்மை, கைத்தொழில் வர்த்தகம் ஆகிய துறைகளிலுள்ள தொழிலாளர்களின் இணைந்த குறிகாட்டிகள்.

1974 இன் தொடக்கத்தில் அரசால் வழங்கப்பட்ட கூலிகள் உயர்ச்சியே, பெயரளவுக் கூலியளவுகளின் உயர்ச்சிக்கு ஏதுவாகும். 1974 ஏப்பிரல் 1ஆம் நாள் முதல் அரசு (1973 ஒற்ரோபர் 1 லாம் நாள் முதல்) மாதமொன்றுக்கு, 400/- ரூபா ஊதியம் அல்லது கூலி பெற்ற அரச, தனியார் துறை ஊழியர்கட்கு வழங்கப்பட்ட 10 சத வீத கூலியுயர்வை, மீளப்பெற்று மாதமொன்றுக்கு ரூ. 800/- அல்லது குறையப் பெறுபவர்கட்கு, 20 சத வீத கூலி உயர்ச்சியொன்றினை வழங்கியது அரசாங்கத் துறையில் இந்தக் கூலியுயர்ச்சியானது 1963 ஒற்ரோபர் 1 இல் வழங்கப்பட்ட சிறப்புக் கொடுப்பனவை, மாதமொன்றுக்கு ரூ. 800/- அல்லது குறைவாகப் பெறும் ஊழியர்கட்கு 20 சத வீதமும். ஆகக் கூடியது ரூ. 50/- என்ற மாறுதல் பதிலீடு செய்தது. மாதமொன்றுக்கு ரூ. 800/- அல்லது குறைவாகப் பெறும் வதிவு ஓய்வாளர்கட்கும், இவ்வுயர்ச்சி உரித்தாகியது 1972 இல் வழங்கப்பட்ட ரூ. 7.50 சிறப்புக் கொடுப்பனவானது தொடர்ச்சியுறவில்லை.

1973 ஒற்றோபரில் அரசத் துறையின் கூலி உயர்ச்சியானது, தனியார் துறைக்கும் விரிவாக்கப்பட்டது. மாதமொன்றுக்கு உழைப்புக்களாக ரூபா 400/- க்கு மிகாத மாத நாட் கொடுப்பனவு தொழிலாளர்களுக்கு, 10 சத வீதத்தால் கூலியை உயர்த்தும்படி தனியார் துறையை அரசு பணித்தது. மாதமொன்றுக்கு ரூபா 800/- க்கு மிகாத உழைப்பினைப் பெறும் எல்லா ஊழியர்கட்கும் 1974 ஏப்பிரல் 1 லிருந்து 1973 ஒற்றோபருக்குப் பதிலாக 20 சத வீதத்தால் (ஆகக் கூடியது ரூ. 50/-) உயர்த்தும்படி தனியார் துறை பணிக்கப்பட்டது. எந்தக் கூட்டு உடன்படிக்கையின் கீழும், இணக்கத்திற்காய மேலதிகக் கூலியுயர்ச்சி மீளநிகழா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு நன் கொடைகளிலிருந்து அல்லது கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியின் அடிப்படையில் கணிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிகளிலிருந்து கழிக் கப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டது.

அட்டவணை II (ஐ) 7 இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளின்படி அரசு ஊழியர்களின் ஆகக் குறைந்த உண்மைக் கூலி அளவுகள் ஓரளவு குறைவுற் றன. மறுபுறத்தில் 1973 ஐக் காட்டிலும், கூலிச் சபைகளின் தொழிலாளரின் உண்மைக் கூலிகள், 1974 ல் உயர்ச்சி நிலையை நோக்குவனவாகவிருந்தன, இந்த அடிப்படை மதிப்பீடுகளின் வேறுபாடுகள் உண்மையான கூலி அளவுக ளைப் பெறுவதன் பொருட்டு பயன்படுத்தப்பட்ட பெயரளவிலான கூலிகளைக் குறைப்பதற்கும் வாழ்க்கைச் செலவு குறிகாட்டியைப் பயன்படுத்துவதற்கும் கையாளப்பட்ட முறையின் செல்லுபடித்தன்மையை ஐயத்திற்குரியதாக்கு கிறது. எவ்வாறுயினும். கொடுக்கப்பட்ட உண்மை நிலையில் மொத்தளவின தான ஆகக் குறைந்த கூலி அளவுகள் குறைப்பிற்குப் பயன்படுத்தப்படும். கொழும்பு நுகர்வோரின் விலைக் குறிகாட்டி வாழ்க்கைச்செலவு உயர்ச்சியினைக் கீழ் மதிப்பீடு செய்கிறது; அரச ஊழியர்களின் உண்மைக் கூலிகளின் வீழிறக்க மானது அட்டவணை II (ஐ) 7 ல் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளை விட கூடியதாய் இருத்தல் வேண்டுமென்பது புலப்படுகிறது. அவ்வாறே. 1974இன் வாழ்க்கைச் செலவின் ஏற்ற உயர்ச்சியை எடுக்குமிடத்து வேளாண்மை, கைத் தொழில் வணிகம் ஆகியவற்றின் உண்மைக் கூலிகள் பெருமளவில் குறை வடைந்திருக்கலாம் என்பது பெறப்படுகிறது.